**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I
8074767

# FIRST INFORMATION REPORT
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C

1. District : திருச்சி மாவட்டம் | PS: திருச்சி ஊழல் தடுப்பு பிரிவு காவல்நிலையம் | Year: 2021 ஆண்டு | FIR No.: 9 மு.த.அ. எண் | Date: 17.12.2021 நாள்

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச்சட்டம் | Sections பிரிவுகள்: 7(a) of Prevention of
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: Corruption Act 1988
   (iii) Act சட்டம்: | Sections பிரிவுகள்: as amended in 2018
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from நாள் முதல் : 13.12.2021 | Date to : நாள் வரை
   Time Period : நேர அளவு | Time from நேரம் முதல் : 1230 Hrs | Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 17.12.2021 | Time நேரம் : 07 00
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 17.12.2021 | Time நேரம் :

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — Computer Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு துாரமும், எத்திசையும் — VAO OFFICE KANNAKUDI 35 KM வடக்கு
   Beat Number : முறைக் காவல் எண் | (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் — M. வெள்ளைச்சாமி | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் — [illegible]
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — 1968 | (d) Nationality நாட்டினம் — இந்தியன் | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் | Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் — விவசாய கூலி வேலை | (g) Address : முகவரி — Old no. 3/220 New no. 3/261, கோயில் காலனி, கண்ணாக்குடி (Po) லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம்

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   திருமதி [illegible], கிராம நிர்வாக அலுவலர், கண்ணாக்குடி கிராமம், லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம்

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   [illegible] தாமதம்

* GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்) —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் இணைக்கப்பட்டுள்ளது.

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ………………… Rank ………………… to take up the Investigation / Refused Investigation / transferred to PS…………………………………………….on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ………………………… பதவி ………………… நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ……………………………………… காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

பெரியசாமி

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

G. [signature] 17.12.2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
Inspector of Police
VBAC, Trichy

15. Date & Time of despatch to the court: 17.12.2021
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் …………………………
Rank: நிலை …………………No. எண் ………

**கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு வழக்குகள் சிறப்பு நீதிமன்றம், திருச்சிராப்பள்ளி அவர்கள் முன்பாக பணிந்து சமர்பிக்கப்படுகிறது.**

**திருச்சி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2021–இன் முதல் தகவல் அறிக்கையின் காலம் 12ன் தொடர்ச்சி.......**

திருச்சிராப்பள்ளி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு காவல் ஆய்வாளராகிய நான், 17.12.2021 அன்று காலை சுமார் 07.00 மணியளவில் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, M.பெரியசாமி, த/பெ.மருதை, பழைய எண்.3/220, புதிய எண்.3/261, குளக்குடி காலனி, கன்னாக்குடி அஞ்சல், லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம் என்பவர் கொடுத்த புகார்மனுவை பெற்று, அந்த புகார் குறித்து, புகார் மனுவில் கூறப்பட்டுள்ள, திருச்சி மாவட்டம், லால்குடி வட்டம், கன்னாக்குடி கிராமத்திற்கான கிராம நிர்வாக அலுவலராக பணிபுரியும் திருமதி.மலர்கொடி மற்றும் புகார்தாரர் திரு.M.பெரியசாமி ஆகியோர்களின் முன் நடத்தைகள் பற்றி ரகசியமாக விசாரணை செய்ததில், புகார்மனுவில் கூறப்பட்டிருந்தபடி, புகார்தாரர் திரு.M.பெரியசாமியிடம் எதிரி திருமதி.மலர்கொடி, கையூட்டாக பணம் கேட்டுள்ளரர் என்பதற்கான முகாந்திரம் இருப்பதாக தெரியவந்தது. ஆகையால் புகார்தாரரின், புகார்மனுவின் பேரில் வழக்கு பதிவு செய்ய, பொறுப்பு காவல் கண்காணிப்பாளர், மத்தியசரகம், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை அவர்களின் அனுமதி பெற்று, இன்று 17.12.2021ஆம் தேதி, காலை 09.00 மணிக்கு திருச்சி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.09/2021 சட்டப் பிரிவு 7(a) ஊழல் தடுப்புச் சட்டம் 1988 (as amended in 2018)–ன்படி வழக்கு பதிவு செய்தேன். புகார்மனுவின் விபரம் பின்வருமாறு: 17.12.2021 அனுப்புநர் M.பெரியசாமி, த/பெ மருதை, பழைய எண்.3/220, புதிய எண்.3/261, குளக்குடி காலனி, கன்னாக்குடி அஞ்சல், லால்குடி வட்டம், திருச்சி மாவட்டம், பெறுநர் லஞ்ச ஒழிப்பு அதிகாரி, லஞ்ச ஒழிப்புத்துறை, திருச்சி. அய்யா, நான், நான் திருச்சி மாவட்டம் குளக்குடி காலனியில் குடும்பத்துடன் சுமார் 40 வருடங்களாக வசித்து வருகிறேன். நான் விவசாய கூலிவேலை செய்து வருகிறேன். கடந்த 1999–ம் வருடம் அரசாங்கத்தால் எங்கள் கன்னாக்குடி கிராமத்தில் ஏழைகளுக்கு இலவச வீட்டுமனை ஒதுக்கீடு செய்தார்கள். அதன்படி நாங்கள் வசித்துவரும் இடத்திற்கு என் குடும்பத்தில் எனது மனைவி தனபாக்கியம் பெயருக்கு சுமார் 3 சென்ட்டுக்கு R.Dis.HSD 24/99-2000 நாள் 15.4.1999–ன்படி ஒதுக்கீடு செய்யப்பட்டு லால்குடி தாசில்தாரிடம் இருந்து ஒரு உத்தரவு ஆணை கொடுத்தார்கள். அந்த இடத்தில் அரசாங்கத்தால் தொகுப்புவீடு ஒன்றும் கட்டி கொடுத்தார்கள். எங்கள் கன்னாக்குடி கிராமத்தில் அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட இலவச மனைகளுக்கு பட்டா கொடுப்பதாக கேள்விப்பட்டு, எனது மனைவியின் பெயரில் உள்ள மனைக்கு பட்டா வேண்டி ஒரு மனுவினை எங்கள் ஊர் கன்னாக்குடி VAO திருமதி.மலர்க்கொடி என்பவரிடம் சுமார் 10 நாட்களுக்கு முன்பு கொடுத்தேன். மனுவினை பெற்றுக்கொண்ட அவர் சுமார் ஒரு வாரம் கழித்து வந்து பார் என்று சொன்னார். அதன்பேரில், திங்கட்கிழமை 13.12.2021 அன்று மதியம் சுமார் 12½ மணியளவில் கன்னாக்குடி VAO ஆபீசிற்கு சென்று அங்கு VAO

திருமதி.மலர்க்கொடி அம்மா அவர்களை பார்த்து எனது பட்டா எப்போது கிடைக்கும் என்று கேட்டபோது, VAO அம்மா உன் மனு அப்படியேதான் உள்ளது. நீ ஏதாவது பார்த்து கவனிச்சின்னாதான் உனக்கு பட்டா கிடைக்க ஏற்பாடு செய்ய முடியும் என்று சொன்னார். நான் அதற்கு என்னம்மா செய்யனும் என்று கேட்டேன். அதற்கு VAO அம்மா உனக்கு பட்டா வேணும்னா மூவாயிரம் கொடு, பட்டா கிடைக்க ஏற்பாடு செஞ்சி தாறேன்னு சொன்னார். நான் அதற்கு அவரிடம் நானே கூலிவேலை செய்றேன்மா, பாத்து கொறச்சு சொல்லுங்கம்மா என்று சொன்னேன். அதற்கு VAO மலர்க்கொடி அம்மா உனக்கு ஏற்கனவே கொறச்சிதான் சொல்லியிருக்கேன். வேணும்னா ஆயிரம் ரூபா கொறச்சிகிட்டு இரண்டாயிரம் கொடுன்னு சொன்னார். எனக்கு லஞ்சம் கொடுக்க விருப்பமில்லை. இருந்தாலும், அப்போதைக்கு நான் வேறு வழியில்லாமல் சரிம்மா இரண்டு நாள்ல கொண்டு வந்து கொடுக்கிறேன்மா என்று சொல்லிவிட்டு வீட்டுக்கு வந்துவிட்டேன். நான் வீட்டில் இருந்தபோது பெரம்பலூரில் உள்ள எனது நான்காவது மகள் சுபத்திராவின் கணவர் பிரபுவுக்கு உடல்நலம் சரியில்லாமல் மருத்துவமனையில் சேர்த்திருப்பதாக தகவல் வந்ததன்பேரில், உடனடியாக புறப்பட்டு நான் பெரம்பலூருக்கு எனது மருமகனை பார்க்கச் சென்று அங்கேயே இருந்துவிட்டு நேற்று **16.12.2021** சாயங்காலம் வீட்டுக்கு வந்தேன். என் மனைவி தனபாக்கியத்திடம் இலவச பட்டாவுக்கு VAO மலர்க்கொடி பணம் ரூ.2000/= கேட்டதைபற்றி சொன்னேன். அதற்கு என் மனைவி, நீ லஞ்ச ஒழிப்பு ஆபீசுக்குப்போய் புகார் கொடுத்து VAO மலர்க்கொடி மீது நடவடிக்கை எடு என்று சொன்னார். என்னிடம் லஞ்சம் கேட்ட கன்னாக்குடி VAO திருமதி.மலர்க்கொடி மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு(sd)M.பெரியசாமி. 17.12.21. Sir, Submitted to the Court of the Hon'ble Special Judge, Special Court for Prevention of Corruption Act 1988, Thiruchirappalli. Received the report at 07.00 hrs on 17.12.2021 and made Preliminary Enquiry and registered a case in Trichy V&AC Cr.No.09/2021 u/s 7(a) of Prevention of Corruption Act 1988 (as amended in 2018) at 09.00 hrs on 17.12.2021. (Sd)G.Sakthivel, 17.12.2021, Inspector of Police, V&AC, Trichy.

G. Sakthivel
17.12.2021

INSPECTOR OF POLICE
VIGILANCE AND ANTI - CORRUPTION
TRICHYRAPPALLY